**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, KARUR.**

**MCOP.NO. 197/ 2024**

Deposition of PW - 1 solemnly affirmed by S.Vidya Priya, Bench Clerk Grade-II of this court on 04.09.2025 in accordant with provisions of XLIV of 1989.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பாலகிருஷ்ணன் | Age | : | |
| Father's Name | : | மருதைவீரன் | Village | : | |
| Calling | : | | Taluk | : | |

**2-ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு விபத்தினால் ஏற்பட்ட காயங்கள் வெளிக்காயங்கள் ஆறிவிட்டன என்றால் சரிதான். நான் கூலி வேலை செய்து வந்தேன். தற்போது வேலைக்கு செல்வதில்லை. விபத்து சமயத்தில் நான் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சென்று கொண்டிருந்தேன். எதிரில் வந்த வாகனம் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வேகமாக வந்து மோதிவிட்டது. எதிரில் வந்த வாகனம் எனது வாகனத்தில் மோதிய பின்புதான் நான் கவனித்தேன். தார் சாலையின் நடுவில் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனது வயது, வருமானம், தொழில் ஆகியவற்றை நான் நிரூபிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்கள் இந்த வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இந்த விபத்தினால் எனக்கு நிரந்தர ஊனம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. நான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் பூரண குணம் அடைந்த பின்புதான் என்னை கங்கா மருத்துவமனையிலிருந்து விடுவித்தார்கள் என்றால் சரிதான். நான் எனது மகன் வீட்டில் வசித்து வருகின்றேன் என்றால் சரிதான். நான் வயது முதிர்வின் காரணமாக எனது மகன் வீட்டில் வசித்து வருவதால் எனக்கு தனிப்பட்ட வருமான இழப்பு இல்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் விபத்து ஏற்படவில்லை என்றாலும், நான் கேட்டுக்கொண்ட பரிகாரம் அதிகம் என்றாலும் சரியல்ல. நான் சாலையை கடக்க முயற்சி செய்தபோது இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

(ஓம்.என்.எஸ்.ஜெயபிரகாஷ்)
தலைமை குற்றவியல் நடுவர்,
கரூர்.